மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை–600 002.

கடித எண். 13188 /ம.தொ.அ2/மாபோக/2025. நாள். .05.2025

பெறுநர்:

திரு.சி.கோவிந்தகிருஷ்ணன்,
47/1, Phase II, நொளம்பூர்,
முகப்பேர் மேற்கு, சென்னை–600037.

அய்யா,

பொருள் : மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் Unique Disability ID card (UDID) காண்பித்து பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ள அனுமதி கோருவது – தொடர்பாக.

பார்வை :
1. தங்களது கடித நாள்.09.04.2025.
2. அரசாணை (நிலை) எண். 01 / மாற்றுத்திறனாளிகள் நல (மா.தி.ந2)த் துறை, நாள்.03.06.2021.
3. அரசாணை (நிலை) எண். 51 / போக்குவரத்து(பி1)த் துறை நாள்.30.05.2022.

------------

பார்வை–1ல் காணும் தங்களது கடிதத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் Unique Disability ID card (UDID) காண்பித்து பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ள அனுமதிக்க கோரப்பட்டுள்ளது.

பார்வை–2ல் காணும் அரசாணையில் மாற்றுத்திறனாளிகள் தாங்கள் வசிக்கும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தால் வழங்கப்பட்ட அசல் தேசிய அடையாள புத்தகம் / UDID Smart Card அட்டையை நடத்துநரிடம் காண்பித்து, தமிழ்நாட்டில் இயக்கப்படும் அனைத்து சாதாரண கட்டண நகரப் (White Board – மகளிர் விடியல் பயணம்) அரசு பேருந்துகளில், ஒரு துணையாளருடன் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை–3ல் காணும் அரசாணையின்படி, 2024–2025 ஆண்டு முதல் மாநகர் போக்குவரத்துக் கழக Deluxe மற்றும் Express பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் பயணம் மேற்கொள்ள இ–சேவை மைய இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து, இணையதளம் வாயிலாகவே கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு,
மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வ.து., சென்னைக்காக,

17.05.25

இணை மேலாண் இயக்குநர்.

16/5/2025

3/3

இணைப்பு : 2